4. அரசினர் தீர்மானம்—(தொடர்ச்சி)

(ஆ) விதி 54—(6)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்கு கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 54(6)ஐ இன்று தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

7. கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை மாநகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): "சென்னை மாநகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து" திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. கருப்பையா.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றினை நான் வைக்கிறேன்.

அறிக்கை

வேலைவாய்ப்பு நிறுவனத்தை ஆலோசிக்காமல் எந்த ஒரு பதவிக்கும் எவரையும் நேரடியாக நியமனம் செய்யக்கூடாது என தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையில் கண்டிப்பான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் 31-12-77 வரை வேலை வாய்ப்பு நிறுவனம் பரிந்துரைக்காமல் செய்யப்பட்ட நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்து அவர்கள் பணியை